கோலாலம்பூர் உள்ளூர் செயல்திட்டம் மூலம்

# 12 லட்சம் வேலை வாய்ப்புகள்

டத்தோ பண்டார் தகவல்

கோலாலம்பூர், ஜூன் 25-

பிடிகேஎல் 2040 எனப்படும் 2040 கோலாலம்பூர் உள்ளூர் திட்டத்தின் வாயிலாக தலைநகர் கோலாலம்பூரில் 12 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் இலக்கை கோலாலம்பூர் மாநகர் மன்றம் கொண்டிருக்கிறது என்று அதன் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரி நேற்று தெரிவித்தார்.

நகர் பொருளாதார வளர்ச்சிக்காக 72 மில்லியன் சதுர மீட்டர் வர்த்தகப் பரப்பளவு உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தின் வாயிலாக 305,000 கட்டுப்படி விலை வீடுகளை நிர்ணயிக்கும் இலக்கையும் நிர்ணயித்திருக்கிறது.

மடானி குடியிருப்போர் வளர்ச்சித் திட்டத்திற்காக 4ஆவது குடியிருப்பு மண்டலம் வாயிலாக இந்த வீடமைப்பு கொண்டு வரப்படும் என்று அவர் மேலும் சொன்னார். மறு மேம்பாடு, லாட்டுகளை இணைப்பது, கட்டுப்படி விலை வீடமைப்புத் திட்டங்கள், பொதுப் போக்குவரத்து மண்டலங்கள் ஆகியவையும் இத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



மறு மேம்பாட்டிற்காக 139 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மிகப் பழைமையான பொது வீடமைப்புப் பகுதிகளும் அவற்றுள் அடங்கும் என்று அவர் தெரிவித்தார். மறு மேம்பாடு என்பது போட்டித்தன்மைமிக்கதாகவும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும்.

மலேசிய மடானி கோட்பாட்டில் சமூக நீதி அடிப்படைக்கேற்ப இந்தத் திட்டங்கள் அமைய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். தலைநகர் கோலாலம்பூரில் நேற்று 2040 பிடிகேஎல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்ச்சியில் அவர் பேசினார். பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இத்திட்டத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கிவைத்தார்.

2040ஆம் ஆண்டுவாக்கில் 70 விழுக்காடு வரை பொதுப் போக்குவரத்துப் பயனீடு இருப்பதையும் இத்திட்டம் இலக்காகக் கொண்டிருக்கிறது என்று டத்தோ பண்டார் விவரித்தார்.

போக்குவரத்து பிரதானத் திட்டம், பாதசாரிகள், சைக்கிள் சவாரி பாதைத் திட்டம் ஆகியவையும் அவற்றுள் அடங்கும் என்று அவர் மேலும் சொன்னார்.